# ஆதி மார்க்க னீதி மொழி

**August 2025**

*இதழ் 49 – ஆகஸ்ட் மாதம் 2025 வெளியீடு*

*© AMNA Trust, Chennai*



## மூலமந்திரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்ஙோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்திர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்த தேசிகேந்திரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்திரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே. பரிசுத்த ஆவித் தெய்வம் பரம்பொருள் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் அருளாசியுடன் ஆடி கடந்த ஆவணி மாதத்தில் ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்சிகை 12 அவை மற்றும் 4 இசை வகுப்பு நிகழ்வுடன் ஜென்ம சாபல்யம் என்ற ஒன்றையே அடி நாதமாகக் கொண்டு 49ஆம் இதழாக மெய் மணத்துடன் மலர்ந்துள்ளது.

பிரதி மாதமும் பிரகாசமாக மலர்ந்து வரும் இந்த சஞ்சிகையின் ஒரே நோக்கம் மக்கள் பார்த்து படித்து பயனடைய வேண்டும் என்பதற்கே. என் மக்களின் அரும்பெரும் திருப்பணியான உழைப்பின் உன்னதத்தில் உதித்து வருவதே இந்த சஞ்சிகை. இதனை பார்த்து படித்து உணர்ந்து இந்த நிலஉலகில் ஜென்மசாபல்ய செயல் அருளும் அறிவு சொரூபரைத் தேடி அடைய வேண்டியது நன்மக்கள் அனைவரின் கட்டாய கடமையாகும். இந்த ஜென்ம சாபல்ய செயலை மக்களின் தலையில் ஏற்றும் ஒரே ஒரு நோக்கத்திற்கே சர்வ காலத்திலும் வந்த அருளாளர்கள் யாவரும் மக்களை கூவிக் கூவி அழைத்தனர். பணம் ஈட்ட பலவழிகள் இருந்தும் போலி குருமார்கள் எளிய வழியாக தேர்ந்து எடுப்பது இந்த தெய்வீகம் ஒன்றைத்தான். ஜென்ம சாபல்யம் பெற இறைவன், வினைப் போகமாக தந்த உபாயமே மானிட ஜென்மம். போலி குருமார்கள் அறிய இயலாத இறைவனின் அருளாசியுடன் இலங்கும் இறை சன்னதமாம் முத்திரைகளை தங்களின் திருக்கரங்களில் தாங்கி வரும் இறைகுருவே நம் வினை தீர்க்கும் விநாயகர்.

உடலுக்கு உபத்திரவம், உபாதை பல நேர்ந்தாலும் உலகில் இறை சிந்தனையுடன் புண்ணிய தலங்கள் பலவும் நடந்தே செல்வர் பலர். இருந்தும் இறுதியில் பெறும் பலனோ வலி வேதனையுடன் பொழுது வீணாகுவது ஒன்று தான். ஒன்று முதல் ஐயறிவு ஜீவ பேதங்களும் பொழுது எனும் பொக்கிஷமுடன் வாழ்ந்தும் அதனை ஆசான் அருளால் நல நாளாக ஆக்கிக் கொள்ளும் சக்தி, தனி சீதனமாம் ஆறாம் அறிவைப் பெற்ற மனு ஒருவனுக்கே உண்டு. இப்படியான அறிவு நிலை யாவற்றின் சிறப்பும் பொதிந்து வரும் இம்மின்னணு சஞ்சிகையை நன்மக்கள் யாவரும் பார்த்து படித்து பயன்பெற எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித் தெய்வம் பரம்பொருள் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி வணங்கி வேண்டி வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai 

*உன் னினைவு என்னும் பிடரியில் சூடு ஏற்றவேதான் னம் சாலையில் னடக்கும் தவவணக்கம், தூங்காது விழித்திருந்து பாரா வணக்கம் செய்தல், தீர்க்க தரிசன வசனங்களை அதம்பி உரக்கச் சொல்லுதல் முதலியனவற்றை எடுத்து வைத்துள்ளோம். இன்னும் உன்னைக் கோபிப்பதும், கவலையில் ஆழ்த்துவதும், ஏக்க மூட்டுவதும் அதற்காகத்தான்.*

*உன்னுடைய தேகாதியந்நத்திலும் மயன மயனமாக னுழைந்து வேலை பார்க்கும் பாரப் பெரிய பிரளய ஆயுதத்தின் கூரை மழுங்கடித்து, ஜெயித்து, தூக்கி எறிகிற வல்லப சம்பாதனையே இங்கு னடக்கும் குழல் வணக்கம். ஜீவன் முத்திக்கு வேண்டியது னிஷ்டை. ஆனால் தேக முத்திக்கு வேண்டியது சாலைக் குழல் வணக்கம்.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2025 ஜூலை மாதம் அவை நிகழ்வுகள் – 2025 ஆகஸ்ட் மாதம் வெளியீடு

## 03-07-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **திருவளர் திருவே ஷெய்குகள் ஷெய்கே...** எனும் குருமணி மாலை பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
மக்கமா நகர் றவுலா சரீப் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் இறுதி நபி என அழைக்கப் பெற்ற நபி பெருமானவர்கள் சன்னிதி முன், சாலை ஆண்டவர்கள் தன் குருகொண்டல் தனிகைமணிப் பிரானவர்களின் பத மலர் போற்றி சிவானுபவத்துடன் பாடிய திருப்பாடலே குருமணி மாலை.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் திருவாக்கியம் எண்: 6** கருணா மூர்த்தியாகிய குருபிரான் பேரிரக்கம் கொண்டு அவலட்சண அழுகப் பிறப்பில் பிறந்த நரனின் தலையில் அறிவு மாணிக்கத்தை பதித்து, மனுவாகப் படைத்து, சாமுன் சாகப் பழக்கி பிணி மூப்பு சாக்காடு இல்லா நித்திய தேகத்தில் குடியேற்றி பாத லட்சணத்தில் வாழ வைக்கிறார்.

**ஆனந்நக் களிப்பு - குருபிரான் அருளமுதம்:** இறைவனின் சர்வ படைப்பும் விரும்பும் துக்க நிவர்த்தி சுகப்பிராப்தி எனும் மெய்ச்செயலை உணர்த்தும் திருப்பாடலே ஆனந்நக் களிப்பு. நித்திய சுகம் தரும் நித்தியராம் ஆசானின் திருவாய் மொழியே நாத மருந்தாகிய சாவா வரம் தரும் சஞ்ஜீவி மூலிகை. இதனை உண்டவர்கள் பிறவாமை எனும் பெரும்பேறு பெற்று அந்நாட்டிற்குரிய வித்தாக விளங்குவர். இவர்களே இதய மாளிகையுள் இருக்கும் கோடாணு கோடி கால தேவ ரகசியம் உணர்ந்த உத்தமராகி பலருக்கும் பலன் தரும் விருட்சமாகின்றனர். கற்பனை கடந்ததாகவும், சொற் பொருளுக்கு எட்டாததாகவும் விளங்கும் சஞ்ஜீவியை அகமுகத்தில் அனுபவிக்க வைத்து அவங்களற்ற ஆனந்த நிலையருளும் அருட்குருவின் பத மலர் பணிவோமாக!

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 05-07-2025 ~ சனிக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பிரம்மப்பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **பரிசு குருவே மறையின் தரிசனை பண்ணுருவே...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரர் கௌதம்:* தன்னில் இருக்கும் இறைவனை அறிய வழிகாட்டும் தத்துவ வடிவங்களே கோவில். நம் மனம் அலையாது காக்கும் அறச்செயல் மூலம் பிறவாமை பெற அருள்பவரே குருபிரான். அவரே நம் விதியை வெல்லும் மதியாகிய பொருளை அறிய வைப்பவர். அவரின் வாய்மையே நம் அறியாமை அகற்றி அறிவுத் தெளிவுடன் வாழச் செய்யும். அந்தக்கிதாபெனும் குருவின் நாதமே நம் மரண வறுமை தீர்க்கும் மாமருந்து. பரிசாக வரும் குருவின் பாதம் பற்றிப் பெறுவதே பரமபதம்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **வேதாகமம்: கொரிந்தியர் - அதிகாரம் 15, திருவாக்கியம்: 52,54; கொரிந்தியர் -2ம் அதிகாரம் திருவாக்கியம் 16:** புண்ணிய உருவான குருவின் திருவாய் மொழியே எக்காளம். ஆறாம் அறிவுக்கான கருவிக் குலத்தை அறிவிப்பதும் அதுவே. ஏழிசை மூலம் வரும் 72 மேளகர்த்தா ராகங்களே எக்காளம். எண்டிசைக்கும் நான் என முன்னிற்கும் பஞ்சாட்சரமான குருவின் நாதத்திற்கு இசைவதே இசையாகும். அழிதேகத்துள் அழியா இறைவனைக் காணும் வழியில் படும் பாடுகளே வழிபாடு. வீணாகும் நமது வயது வாழ்நாள் வீணாகாமல் இரட்சிக்கும் நடராஜப் பெருமானே குருபிரான். இவை யாவும் செயலாக நடைபெறும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.


பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே னிறைவானது.

## 06-07-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பரிசுத்த ஆவித்தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **பரமனே உருவெடுத்துப் பாரிடைக் குருவாய்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

நமது அஞ்ஞான இருளகற்றி அறிவுக் கண் திறப்பித்து, சர்வ மூலமந்திரங்களும் நிரூபணையாகும் இடமாகிய நமது சொந்த தேகத்தில் குடியேற்றி வாழ வைப்பவரே குருபெருமான். சகல உயிர் ஜீவனிலும் ஆடும் பாதமாக இருக்கும் இறைவனை அறிய மனிதன் பெற்று வந்த தனிச் சீதனமே அமானிதம்.



*ஜீவசகோதரி பாரதி:* ஐயறிவு வரை அனைத்தையும் ஆளும் வல்லபமே மனித அறிவு. **வானெலாம் சிறப்போ னாகி வருகுவே னெனவாக் கீந்து தானெழு கடனும் வாங்வித் தரைதனில் னரனா வந்நோன்** என சாலை ஆண்டவர்கள் அருளிய படி, நரனை னித்திய வாழ்வுக்கான மனுவாக மாற்றுபவரே குருபிரான். அவரே தன் ஓரிதழ் தாமரையால் ஆகாய கங்கை எனும் அமுதருளி மனுவை அமரப் பிறப்பிலாக்கி எமனணுகா வைரமணி தேகத்தில் குடியேற்றி வைக்கிறார்.

*ஜீவசகோதரி அஞ்சனா:* மனு வடிவத்தில் வரும் அவதார புருஷர்களே பரம்பொருள். அவர்களே அவரவர் இருதயத்தில் இருக்கும் இறைவனை அறியச் செய்து பிறவிப்பிணி நீக்கி அகரப் பொருள் அறியச் செய்து தேவராக மாற்றி பேரின்ப பெருவாழ்வு வாழச் செய்கிறார்கள்.

*ஜீவசகோதரி அன்னபூரணி:* முக்குணங்களால் உண்டான மூவினைகள் மூலம் வந்த நம் பிறவிப்பிணியே மாயக்கூத்து. அதில் சிக்கிக் களைத்த நம்மை மனுவாக மாற்றி மெய்யறிவு உதயம் காட்டி ஜென்ம சாபல்யம் அருள்பவரே ஆசான்.

*ஜீவசகோதரர் அஜய்கிருஷ்ணன்:* எதார்த்த பரமாத்மாவாக வரும் தேவ குருவை தஞ்சமடைந்தே ஒருவன் தனது கர்ம வினையை தீர்க்க முடியும். உடல் கடந்து உயிர்வழி பற்றி பற்றற்றான் பற்றை பற்றி ஆத்ம வீடு அடைவதே விதேக முக்தி. இதற்கான பிரம்ம ரகசியங்களை அருள்வதே உபநிஷத்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் கணேஷ்கிருஷ்ணன்:* வாழும் காலத்தில் அடையும் சொர்க்கம் நரகம் பற்றி கூறுவதே கடோபநிஷத். உடல்-புத்தி-மனம்-இச்சை-ஆத்மா என்பன ரதம்-சாரதி-கயிறு-குதிரை-பயணி என்பதாக உள்ளது. குருவருளால் நம் மும்மலம் கருகி சாமுன் சாகப்பழகி மனதை அறிவாக மாற்றி வைராக்கிய மணிக் கம்பத்தில் இறுகக் கட்டி வாழ்வதே பேரின்ப பெருவாழ்வு.

*ஜீவசகோதரர் வாசுதேவன்:* மெய்யான குருவின்றி ஞானம் இல்லை. குரு தன் ஞான அகவலால் அழைத்து ஞான முறையீட்டின் முறையறிவித்து மெய்வழி மூலம் பெறும் மெய்மண ஞானத்தால் நம் வீண் நாளை வாழ் நாளாக்கி நித்திய வாழ்வு வாழச் செய்கிறார்கள்.

*ஜீவசகோதரர் சங்கர்:* ஏக நாயகனாம் இறைவனை அறிவதே மனுவின் தலையாய கடமை. அந்நாட்டிற்கு உரிய வித்தான மனுவைத் தேர்ந்தெடுத்து, தேவர்களாக ஆக்கும் திருச்செயல் நடைபெறும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 10-07-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் சாலை ஆண்டவர்கள் அருளிய **வித்ததில் மரமாய் மரமதில் வித்தாய்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* ஓரறிவு மரம் தரும் கனியின் வித்து விளைந்து தரும் பலன் போல், மெய் ஆசானின் நாதமாகிய வித்தில்லா வித்து நரனின் செவியில் பாய்ந்து மனுவாக்கி னித்தியப் பொருளான மெய்யை அறியச் செய்கிறது.

**குருபிரான் அருளமுதம்:**
ஆசான் தயவால் தனிச் சீதனமான ஆறாம் அறிவின் செயல் உணர்ந்து மகா மகசூக்கான இருதயமாம் உள்ளத்தில் வணங்குவதே மெய் வணக்கம். அதுவே அவரவர் நாமமான னீதியெனும் மெய்ப்பொருளை அறியச் செய்து மனுவாக மாற்றுகிறது.

**திருமெய்ஞ்ஞானக் கொரல்: திருவாக்கியம்: 6ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:** எங்கிருந்தாலும் பிரகாசிக்கும் விளக்கின் ஜோதி போல், யாவரிடத்தும் ஒரு தலைமுறை காலம் ஒளிர்ந்து அறுசுவையில் பேதமின்றி காட்டும் ஜீவஜோதியை அறியும் சன்மார்க்க செயல் மூலமே சமரசம் சமத்துவம் உண்டாகும்.

**ஆனந்நக் களிப்பு - குருபிரான் அருளமுதம்:** ஜீவ உணவாம் நாத இசையின் இருப்பிடமே அறிவு. அறிவு வடிவாம் ஆசான் தயவால் அறிவதே அறுசுவை கொண்டு ஒளிக்கும் அறுபடை வீடாகும். நாதன் அருளும் னாத சஞ்ஜீவியை செவிமடுத்து கற்பனைக்கும் காட்சிக்கும் சொல்லுக்கும் எட்டாத, மட்டுப்படாத, பேசப்படாத மாற்றறியாத சஞ்ஜீவியாம் ஜீவனை அறியும் வாழ்வே சிரஞ்சீவி வாழ்வு. நம் பாவம் பாழாக்கும் குருவின் வாய்மையே கங்கையாகும். ஆசான் அருளால் ஆறாம் அறிவறிந்து ஏழாம் பிறப்புடலம் எடுத்தே கண்ணும் காதும் னேர் பெற்ற மக்களாகிறோம். அறவழியில் னின்று அறுபடும் வினைகள் மூலமே மனமற்ற பரிசுத்தம் கைவரவாகும். சர்வ மதத்திற்கும் மேலான மதமே சம்மதம். அவரவர் னாமமாம் இறை பொருளுடன் இரண்டறக் கலக்கும் பேரின்பமே ஆனந்நக் களிப்பு, அதுவே குருவருளால் நாம் பெறும் நித்திய ஆனந்தம்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 12-07-2025 ~ சனிக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அறமுதலா யது உதவு மதிபதியோ ருறவே...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரர் கௌதம்:* ஜீவனும் அறிவும் சிவமுமாக விளங்கும் குருவினிடம் சரணடைந்தே பிறவாமை பெற முடியும். எழுதாத எழுத்தாக வரும் வேதமாகிய ஆசானே நம்மை சிவமயமாக்கி பேரின்பத்தை அனுபவிக்கச் செய்கிறார்கள்.

**கோடாயிதக்கூர் – வாக்கியம் 213:** மாயோனாக மனித உரு தாங்கி வரும் சிவகுருபிரானை அடையாளம் காண அவர்களின் பேரருள் வேண்டும். அகிலாண்ட கோடி பிரம்மாண்ட கோடி கயிலை நாடே குருவடிவாக கோடியில் ஒருவரான குலமானாக வருகிறது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **வேதாகமம் : யோவான் அதிகாரம்-14, திருவாக்கியம் - 1:20:27 :** உள்ளமாகிய மகா மகசூக்கான இருதயமே ஈசன் இருப்பிடமென குருவின் அருள் பெற்றவரே அறிவர். அவரின் பரிசுத்த ஆவியால் மறுபிறப்பு பெற்று அகத்தில் விளங்கும் பத்து வயதான கன்னியை அறிந்து வாழும் அக வாழ்வே மாண்புடைய பேரின்ப வாழ்வு.

*ஜீவசகோதரர் யுவராஜ்:* குருவின் கொண்டல் வாய்மையே நம் ஆறாம் அறிவை துலங்கச் செய்து அரி துயிலாம் பிரம்மவித்தையை அருள்கிறது.

பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 13-07-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அழியாப்பதி குடியேறிய னாயக மென் குருவின்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதார் சசிகுமார்:* ஆதி அந்தமும் வேத சாட்சியாக அறிய வைக்கும் குருவே நடுவன். புலன்களின் தலைவனாம் மனதை அடக்கும் செயலே பிரம்மவித்தை. குருவின் பேரிரக்கமே நம் உணர்ச்சிகளை மெய் உணர்வு எனும் அறிவாக மாற்றுகிறது.

*ஜீவசகோதரி மணிமொழி:* மனதற்ற பரிசுத்தமுடன் புண்ணிய உருவாக வரும் குருவே நரனின் பாவம் போக்கி நித்திய மனுவாக மாற்றுகிறார். குரு அருளும் ஒழுக்க நெறியில் நின்று மனதின் அலைவறுத்து தன்னை அறியும் தவச்செயல் பழகும் தலமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் ஸ்ரீதுல்தாஸ்:* மனு தன் அகங்காரம் அடங்கி குருவினிடம் சரண் புகுவதே வீடடையும் வழி என்கிறது மலையாள எழுத்தச்சனின் நூலும் பகவத் கீதையும். குருவே மேலான தத்துவமும் தியானமும் தவமும் என்கிறது குரு கீதை. சாத்வீக குணத்தின் மூலமே விவேகம் வைராக்கியம் மன அமைதி மோட்சம் பெற முடியும்.

*ஜீவசகோதரர் சீனிவாசன்:* ஏதுமிலதாய் யாதும் உளதாய் உள்ள அனாதிப் பொருளை சாலை ஆண்டவர்கள் அருளியது போல் சிவபுராணமும் திருவாசகமும் அதனை இகமும் பரமுமாக அருளியுள்ளது.

*ஜீவசகோதரர் கணேஷ்கிருஷ்ணன்:* மனிதன் எம பயம் கடந்து பேரின்பம் அனுபவிக்கவே தெய்வம் வேண்டும். குருவருளால் இதயத்தில் இறை தரிசனம் பெற்றே செத்திடம் பிறந்திடம்



Copyright © AMNA Trust, Chennai 

இனி சாகாதிருக்கும் இடம் அறிய முடியும். சத்தாகிய நித்திய பொருளை அறிய வைக்கும் ஆசானின் வாக்கே வேதாந்தம்.

*ஜீவசகோரர் கௌதம்:* யுகந்தோறும் வருவேன் எனும் பரமாத்மாவின் சத்திய வாக்கின்படி வந்திருக்கும் அவரை கண்டு தரிசிக்கச் செய்யும் செயலுள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 17-07-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அங்ஙமதிடத்தி லைம்புலக் கதவை யடைக்கும் பேரறிவெனக் கருளி...** எனும் குருமணி மாலை பாடலுடன் அவை மலர்ந்தது.



**குருபிரான் அருளமுதம்:** பேரறிவாகர சொரூபராக வரும் ஆசானின் திருப்பாதம் சரணடைந்த யாவரும் ஐம்புலன் வழியே வயது வாழ்நாள் வீணாகாமல் காத்து காலம் கடந்த பொருளை கைக் கொண்டு பிறப்பற்ற பேரின்ப பெருநிலை பெறுகின்றனர்.

**திரு மெய்ஞ்ஞானக் கொரல்: திருவாக்கியம் எண்: 6** சர்வ மதங்களின் நோக்கமாகிய மறலி கை தீண்டாமையின் நிஜச்செயல் அறியாதோரே சாதி, மத பேதமுற்று வேதத்திற்கு புறம்பாகி சமூகத்தை சீரழிக்கின்றனர். **சமரச வேதம் சாலை அமரர்கள் னீதம்** எனும் சாலை ஆண்டவர்கள் திருவாக்கினை, தன்னுள் அசலாக குருவருளால் உணர்ந்தால் எம்மதமும் சம்மதமென்ற சமாதான சத்திய வாழ்வில் குடியேறி மெய்யறிந்த மக்களாக வாழலாம்.

**அறிவு அறி பாடம் - குருபிரான் அருளமுதம்:** அறிவுக் கடலாக வந்த சாலை ஆண்டவர்கள் தங்களின் வில் ஓசை நடனத்தால் அருளிய வானமிழ்தமே அறிவு அறி பாடம். ஐயறிவு ஜீவ பேதங்களும் நால்வகை யோனி, எழுவகைத் தோற்றத்துள் அடக்கம். தனிச் சீதனமாக ஆறாம் அறிவை மனுவுக்கு இறைவன் தந்த நோக்கத்தை அருள்வதே அறிவு அறி பாடம். ஆதியாகிய சிவமே நித்தம் நம்மை வழி நடத்தும் நித்தியம் என அருளும் குருவின் பர - அபர ஞானத்தால் ஒளிர்வதே நம் அறிவு மாணிக்கம். அவ் அதிசய சத்தியே ஓதாமல் ஓதும் வேத நிலை அருளி ஐவழி விளைவின் அப்பாலாகிய மெய்வழியில் நம்மையும் தொடரச் செய்கிறது. வித்தகராம் குருபிரானே நம் பாவவினை தீர்த்து புண்ணிய வாழ்வில் குடியேற்றி வைக்கிறார்கள்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

*வித்தை யவதாரணம் அதாவது வித்தையின் னிச்சயஞ் ஞெவ்வையாய்ச் சித்தித்தற் பொருட்டு ஏற்றுக் கொள்ளப்பெற்ற அனேக தேவ வல்லபங்ஙளை யுடையவரே! னாதனே! பகவானே! சிவமும் குருவடிவமுமாகிய உமக்கு னமஸ்காரம்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## 19-07-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **பொன்னில மாதர் ஆசை...** எனும் தெய்வத் தேடு கூடகம் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* ஜீவன் எனும் பசு பதியுடன் சேராமல் பாசத்துடன் சேர்ந்து நாசம் ஆகாமல் நம்மை பூரணத்தில் பூட்டி வைக்கும் புராதனரே குருபிரான். நன்னிலமாகிய நமது சொந்த தேகத்தில் குடியேறி வாழும் வகை அருள்பவரும் அவரே. அமானிதம் எனும் ஆறாம் அறிவை அறிவிக்கும் திருநடனமே குருவின் நாதம். பிறவிக் கடன் தீர்க்கும் ஏழாம் பிறப்பு எடுக்க அருள் புரியும் செயலுள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண்: 216** - குருவின் ஆசீர் பாதத்துடன் அவரின் உபதேச மொழிகளை கூச்சமின்றி குரு சன்னதியில் பேசிப் பழகியே மெய் உணர்வைப் பெற முடியும்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **சத்திய வேதம் : யோவான் அருளிய சுவிசேஷம்: அதிகாரம் : 2 வாக்கியம் -10 & 11 :** இறுதி பரியந்தம் வரை இணங்கி இருந்தவனுக்கு இறைவன் தரும் பரிசே ஜீவ கிரீடம். அறியாமை எனும் தோல்வி அறிவின் ஜெயம். குருவின் நாதமே சிற்றறிவை பேரறிவாக மாற்றும். மரணமே யாவர்க்கும் வரும் சோதனை. மனம் எனும் முள்ளுக்காட்டை வைராக்கிய செருப்பிட்டு மிதித்து ஏறிக் காணும் ஏற்றமே ஜென்ம சாபல்யம். மோசேக்கு கர்த்தர் அருளிய 10 கட்டளைகள். காதுள்ளவன் கேட்கக் கடவன்.

1. கடவுள் நிலை அறிந்து அம்மயமாதல்.
2. நகல் மூலம் அகத்தில் அசலறிந்து இறைவனை மெய் வணக்கத்தால் தொழும் பேரின்பச் செயல்.
3. தெய்வம் ஏன் அவசியம் என அறிந்து வணங்குதல்.
4. கர்த்தரின் தயவால் அறம் பழகி மனம் அடங்கி இருப்பதே ஓய்வு நாள்.
5. தந்தை தாய் குரு தெய்வம் எனும் கர்த்தரின் சொல் கேட்டு நடப்பதே ஞான வழியின் சுருக்கம்.
6. செல்லும் நாள் சென்றிடாது காலமற்ற இடத்தில் குடியேறி வாழ்வதே வாழ்வு.
7. எண்ணம் சொல் செயலால் நினைவெனும் ஆகாயத்தில் நன்மை சேர்ப்பதே புண்ணியம்.
8. னீதி என்னும் பொருள் ஆன மனு தன் ஜீவன் நஷ்டம் அடையாமல் காப்பதே மெய்ச்செயல்.
9. பொய்யும் மெய்யும் பிரித்து நம் நாமத்திற்குரிய பொருளை அறிவதே மெய்ச்செயல்.
10. நல்லொழுக்கம் தரும் செயலே பிரம்மவித்தை. சாமுன் சாகப் பழகும் இரண்டாம் மரணமே குரு அருளும் சுவிசேஷ நற்செய்தி.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 20-07-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **என்னமோ வென்று வும்மை எண்ணி விட்டிருந்தேன்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவசகோதரி அருணா:* நம் நாமத்தின் பொருளாம் ஜீவனின் ரகசியம் அறிய, சாலை ஆண்டவர்கள் ஆதி மான்மியத்தில் ஒன்பது பருவங்களாக, சர்வமும் படைத்த எழுதாத எழுத்தையும், அறியாமை அகற்றும் அறிவு வடிவாம் ஆசானையும், கலியனை தவிர்த்து மரண வறுமை தீர மாமருந்தருளும் மன்னவரையும், முது மொழியால் புது உலகம் படைக்கும், என்றும்



Copyright © AMNA Trust, Chennai

புதியவரையும், அவரவருள் ஒளிரும் அறிவாம் பரம்பொருளையும், பழம் பண்ணார மணி உண்டைப் பெட்டகத்தையும், தளிர் இலை பூ காய் பழமாய் சொரியும் பாத நிலையையும், அழியாச் சன்னதம் கொண்டு அறியாமை நீக்கி, ஜீவ சிம்மாசனம் ஏற்றி வைக்கும் மெய்க் கல்வியாம் அருளமுதுமாக அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரி லதாதேவி:* மனுவின் சுத்தத் துறை இருதயத்தில் விளங்கும் இறைவனை குருவருளால் கண்டு வணங்குவதே மெய்வழி. நம் நாமத்தின் பொருள் அறியச் செய்யும் செவிச்செல்வம் கொண்டு, பாலினுள் பொதிந்துள்ள நெய்யைப் பெறுவது போல் நாம் பெறுவதே மெய். நம் மனதின் பிடியிலிருந்து மீட்கும் மகத்துக்களின் துணையுடன் எமன் எல்லையில் நாம் பெறுவதே வெற்றி.

*ஜீவசகோதரர் ராஜேஷ்:* சகல நற்காரியமும் பஞ்ச பூதங்களில் ஒன்றான **சி** எனும் அக்னி சாட்சியாக செய்வதே நன்மை தருகிறது. சார்ந்ததை தன் மயமாக்கும் தணலுக்கு ஒப்பானதே குருவின் வாக்கான தீ. நாவினால் சுட்ட வடுவின் அகமிய ரகசியம் அறிய ஆசான் துணை வேண்டும். ஒலி ஒளியாக வரும் ஆசானின் அருட் ஜோதியாம் அருளமுதின் மூலம் மயிர்ப்பாலம் கடப்பதே பிரம்மவித்தை.

*ஜீவசகோதரி கோமதி:* நிகழ் காலமே மனிதன் வாழும் காலம். காலம் மூன்றின் இருப்பிடமான நம் நினைவால் சென்றதை நினைக்கும் சிறு தொழில் விட்டு நம் நிலையா மனதை நிலைக்கச் செய்பவரே நித்தியர்.

*ஜீவசகோதரர் பழனிக்குமார்:* ஒலி ஒளியாக விளங்கும் அருவுருவாம் குருவின் நாதமே ஒலிவா மலையாகும். சதாசிவம் காட்டும் செவிச் செல்வமே கல்நெஞ்சை பிளக்கும் வாளாக, மனத்திருள் போக்கும் வளைவு வாளாக, மறை மலை பிளக்கும் வாளாக, ஜாதி சிக்கறுக்கும் இருபுறம் கருக்குடைய செந்நிற வாளாக அருவுருவாய் நமையாண்ட விண்ணின் பாதமாக, மெய்வழியின் அடி நாதமாக உள்ளது.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 26-07-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

சாலை ஆண்டவர்கள் அருளிய **அண்ட ராலும றிய வொண் ணாத்திரு...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* ஒரு மெய் ஆசானின் சொல் ஒரு பொருளும் இரக்கமுமே மனுவை தேவனாக்கி அகமியத்தில் விளங்கும் நான்கு தேக ரகசியத்தை அறியச் செய்கிறது. ஆசானுடன் சீடன் கூடிப் பழகி அகம் தூய்மையாகி சத்துருவாகிய அவனது மனம் மித்ருவாக மாறும் பொழுதே வினை தீர்கிறது. அவரவருள் சிற்றணு வடிவாக விளங்கும் திருவடியை கண்டு தரிசிப்பதே தன்னை அறிதலாகும். ஆதியில் இருந்த வார்த்தையே அவரவரின் அடையாளமாகும். தொண்டர்கள் வழி கூடி நடக்கும் சிவராஜ பாட்டையாக விளங்கும் தலமே ஆதி மார்க்க நீதி அவை.

**கோடாயிதக்கூர் : திருவாக்கியம்: 215** - நம் மாயை எனும் பசுந்திரை அகற்ற யுகந்தோறும் நிகழ்வதே அவதாரம். என்றும் குறையா பணக்காரராகிய குருவுக்கே எமனை வெல்லும் வல்லபம் உண்டு. சிவன் எல்லையாகிய கைலாய போக்கு வரத்திற்கு உரியவன் மனு ஒருவனே.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **வேதாகமம்: மத்தேயு: 22:32, 23:33** - அவரவர் அகத்தில் சின்மயப் பொருளாக விளங்கும் வேதமே வேதாகமம். மனதற்ற பரிசுத்த நிலையே மரித்தலாகும். விதியாகிய வினையை மதியாகிய ஆசான் அருளால் தீர்த்த மனுவே தன்னை அறிந்து தேவனாகிறான். தேவ அருள் பெற்றவரே அத்வைத நிலை அறிந்து பிறவாமை பெறுகின்றனர். தேவனின் தயவால் முக்குணம் நீங்கி நிர்க்குணம் ஆனவரே சாயுச்ய பதம் பெறுவர்.



Copyright © AMNA Trust, Chennai August 2025

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* ஜீவ வாழ்வை திடம்படச் செய்தே நம் அறியாமை அகற்றி அறிவை அறிய முடியும். ஆசான் அருளால் அகமியத்தில் உள்ள நம் சொந்த தேகத்தில் குடியேறும் நேரமே நல்ல நேரம்.

*ஜீவசகோதரர் சங்கர்:* தேக ஆலயமே மனித உடல். அனித்திய தேகத்தில் இருக்கும் நித்திய தேகத்தில் குடியேறி நித்திய வாழ்வு வாழ வந்தவனே மனு. இறைவனின் திருநாமத்தை அறிக்கை செய்வதே மனுவின் தலையாய கடமையாகும்.
பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 27-07-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **வேதமும் உயிர்கள் மெய்ப்பால்…** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி ஆர்த்தி:* ஆதியாக ஜோதியாக வருகின்ற குருபெருமானே தாய் தந்தையாக ஞானச்சூலில் நம்மை பெற்றெடுத்து, குருவாக தெய்வமாக அருளமுது ஊட்டி நல்லொழுக்கம் வைராக்கியம் திட கவனம் கொண்டு அறிவில் சிறந்தவனாக மெய்வழியில் வாழ கற்றுத் தருகின்றார்கள். அன்பே சிவனாக ஜீவனாக உள்ளதை அறச்செயல் பழகி உணரச் செய்கிறார்கள்.

*ஜீவசகோதரி அகிலா தேவி:* நமது ஜீவனாகிய சிற்றம்பலப் பொருளை மறைக்கும் மாயை நீக்கும் மெய்க் குருவின் அன்பே, புலன் வழி செல்லும் நம் மனதை அறிவாக மாற்றி சிவ நிலையில் ஏற்றி வைக்கிறது. பிறந்தது இனி இறவாத பேசும் பஞ்சாட்சரமாகிய குருவின் நாதமே நம் மெய் உணர்வை ஓங்கச் செய்கிறது.

*ஜீவசகோதரர் S.K.T விஜய்:* ஓர் தலைமுறை காலம் தன் சிரசில் வீற்றிருக்கும் இறைவனை அறிவதே மனுவின் தலையான கடமை. பரம்பொருளே ஆசானாக வந்து கருணையுடன் யோக நிலைகளில் நம்மை பழக்கி மனம் அலையாமல் இறைவனை அடையும் வழி காட்டுகின்றார்கள். அவர்கள் நம் மீது செலுத்தும் அன்பே நம்மை சிவமாக்கும்.

*ஜீவசகோதரி சஹானா:* நமது எண்ணங்கள் கூரோங்கி இறைவனை அடைய வழிகாட்டுவதே இதிகாசங்கள். ஆசான் அருளால் ஆறறிவை அறிந்து ஏழாம் பிறப்பு எடுத்து எட்டாவது நிலையில் உள்ள அகரப் பொருளை அறியும் தலமே குருஷேத்திரம். உலக மும்மலம் விட்டு ஞானப் பாதையில் நம்மை செலுத்தி சொர்க்கபதி வாழ்வில் குடியேற்றுபவரே குருபிரான்.

*ஜீவசகோதரர் அருண்:* அவரவரின் அறிவு அறியாமையை வெளிப்படுத்துவதே வாய்மை. மெய் குருபிரானின் அருள் வாக்கால் வேதம் விளங்கி, காலக்கணக்கை தன்னுள் அறிந்து பழகி வர, நாத்தழும்பேறி விளைவதே நல்வாக்கு. இறைவனின் சப்த சப்தாதிய சாயலே மனுவினிடம் மவுன மொழியாக வல் ஊமையாக அவரவர் ஜீவனை சிவ நிலையில் ஏற்றுவதாக உள்ளது.

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் படலுடன் அவை இனிதே நிறைவானது.

*சச்சிதானந்த வடிவினரும், வியாபக முடையவரும், பரமாத்மாவும், பிரகாச ஆனந்த வடிவினருமாகிய ஸ்ரீ குருனாதருக்கு னமஸ்காரம்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

## 31-07-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி **குன்றாத பேரருளின் மணியே...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
மனிதன் பெற்று வந்த வரமே அமானிதம் எனும் தனிச் சீதனம் என உணர்த்துவதே வேதம். ஆசான் அருளால் அவரவருள் திருவடி தரிசனம் காண்பதே ஜென்ம சாபல்யம்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல்: திருவாக்கியம்: 6 (தொடர்ச்சி) - குருபிரான் அருளமுதம்:** சாவை மீறும் செயலே சாமி எனும் தேவ ரகசியத்தை குருவின் பாதம் பணிந்து, சன்மார்க்கச் செயல் பழகி நாசிக்கு வெளியே மூச்சு ஓடா தவம் பழகியவர்களே சற்சனர்கள். அடி முடி நடுவாக போகாப்புனல் மேல் வீற்றிருக்கும் பிரம்மமுடி சாகாத்தலையை அறிந்து உணர்வதே பிரம்மவித்தையாகும்.

**அறிவு அறி பாடம் - குருபிரான் அருளமுதம்:** அர்த்த நாரியான நித்தியப் பொருளாம் ஜீவனே சத்தியப் பொருள். ஆசான் தயவால் கண்டத்தில் உள்ள ஜல வடிவ ஜீவனை ஆவியாக்கி சிரசில் சேர்த்து எமனை சிவனாக மாற்றுபவனே சத்தியன். குருவின் திருத்தாள் பணிந்து புண்ணியத்தின் உருவாம் சூக்கும தேகத்தில் குடியேறி வாழ்பவனே ஜாதி மான். மெய்ஞ்ஞான ஒருருளை தேவரதம், தன் சாகாக்கல்வி கொண்டு நம் சிரசில் நடுவதே நீதி. தீபம் ஒளிரச் செய்யும் தூண்டுகோல் போல் நம் அறிவை ஒளிரச் செய்பவரே குருபிரான். மனிதனை பிரகாசிக்கச் செய்யும் மெய்யான ஒளியை அகத்தில் தரிசிப்பதே மெய் வணக்கம். ஆசானை அறிந்து நம் அறிவை அறியும் போதே தேவராகிறோம். மனுவிற்கு வயது தந்ததின் பிரயோஜனம் காலச் சக்கரத்தின் ரகசியத்தை குருவின் தயவால் அறிந்து காலமற்ற இடத்தில் குடியேறி வாழ்வதற்கே.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

*எவருடைய சன்னிதி மாத்திரத்தால் மனது சிதானந்தமய மாகின்றதோ, அத்தன்மைய பரமானந்தரும் ஆனந்த வல்லபருமாகிய ஸ்ரீ குருவாகிய தங்களை னமஸ்கரிக்கிறேன்.*
***~ குரு கீதை***


Copyright © AMNA Trust, Chennai

## இசை வகுப்பு
## தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

### 06-07-2025 ~ ஞாயிற்றுக்கிழமை

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. ஆதி மான்மியம் ஆதியோதய தலைப் பருவம் பகுதியில் **ஒரு தனித் தலைமை உதயமதாகி...** எனும் பகுதி ஓதும் முறை பயிற்றுவித்து அவை இனிதே நிறைவானது.

### 13-07-2025 ~ ஞாயிற்றுக்கிழமை

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **னம்பிய தன்னுயிர்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. தொடர்ந்து சென்ற வாரத் தொடர்ச்சியாக ஆதி மான்மியம் ஆதியோதய தலைப் பருவம் பகுதியில் **ஒரு தனித் தலைமை உதயமதாகி...** எனும் பகுதி ஓதப் பெற்று அவை இனிதே நிறைவானது.

### 20-07-2025 ~ ஞாயிற்றுக்கிழமை

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **ஓதுமறை வேத னெறி...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. ஆதி மான்மியம் ஆதியோதயப் பருவத்திலிருந்து **ஆக்கியோனந்ந...** என்ற பாடலும் அதனை தொடர்ந்து வரும் வசன நடையும் ஓதுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

### 27-07-2025 ~ ஞாயிற்றுக்கிழமை

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **பூமியின் பாரம் தீர்க்க...** என்ற ஸ்தோத்திரப் பாடல் கேதாரகௌளை ராகத்தில் பாடப் பெற்று அவை மலர்ந்தது. குருபிரான் வழி காட்டலின் படி சென்ற வார தொடர்ச்சியான மான்மியம் பகுதி ஆதியோதயப் பருவத்திலிருந்து **ஆக்கியோனந்ந...** என்ற பாடலும் அதனை தொடர்ந்து வரும் வசன நடையும் ஓதுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!

*எவருடைய வாக்காகிய அமிர்தமானது ஸம்ஸார மென்னும் விஷத்தைக் கொல்லுகின்றதோ, அத் தன்மைய சகஜ ஆனந்தவடிவ குருவாகிய தங்களுக்கு னமஸ்காரம்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai  

## ஜூலை 2025 மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்

### 24-07-2025 ~ வியாழக்கிழமை

குருபிரான் **திரு. சாலை ரவி அப்பா** தன் சீடர்களுடன் அம்பாசமுத்திரம் அருகே உள்ள பிரம்மதேச கைலாச நாதர் கோயிலுக்கு எழுந்தருளினார்கள்.



## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **04-09-2025 / சென்னை வியாழக்கிழமை** | நமது குருபிரான் திருமுன்பாக ஜீவதம்பதியர் **மகேஸ்வரன் - பானு (சென்னை)** அவர்களின் **மூத்த புதல்வி ரம்யா** அவர்களின் திருமணம் 04-09-2025 வியாழக்கிழமை காலை 9.00 மணி – 10.30 மணியளவில் சென்னை குரோம்பேட்டையில் நடைபெற இருக்கிறது. |
| **21-09-2025 / திருப்பெருந்துறை ஞாயிற்றுக்கிழமை** | குருபிரான் தன் அங்கத்தினர்களுடன் புதுக்கோட்டை மாவட்டம், திருப்பெருந்துறை ஊரில் அமைந்துள்ள தேவகோமான் ஸ்ரீ மாணிக்கவாசகப் பிரானவர்கள் சீரமைத்துக் கட்டிய, தேவாரப் பாடல் பெற்ற ஆத்மநாதசுவாமி இருக்கும் ஆவுடையார் கோவிலுக்கு எழுந்தருள உள்ளார்கள். |



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2025 ஜூலை மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 98**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai 

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Vijayakumar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 49 – Month: August 2025*